**நவம்பர் – 21**

# TNPSC துளிகள்

- தேசிய விருது பெற்ற நடிகை கீர்த்தி சுரேஷ், குழந்தை உரிமைகள் மற்றும் மனநல விழிப்புணர்வு குறித்த முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக யுனிசெஃப் இந்தியா பிரிவின் பிரபல ஆதரவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய மற்றும் பிரிட்டிஷ் படைகளுக்கு இடையிலான கூட்டுறவினை வலுப்படுத்துவதற்காக இந்தியா-ஐக்கியப் பேரரசு இடையிலான எட்டாவது கூட்டு இராணுவப் பயிற்சியான அஜயா வாரியர்-25 இராஜஸ்தானில் தொடங்கப் பட்டது.
- 1939 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று நாஜி ஒடுக்குமுறையை எதிர்த்த செக் மாணவர்களின் வரலாற்று சிறப்பு மிக்க துணிச்சலைக் குறிக்கும் வகையில் சர்வதேச மாணவர் தினமானது நவம்பர் 17 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Empowering Students to be Agents of Change" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மெட்ரோ இரயில் திட்ட முன்மொழிவுகள்




- கோயம்புத்தூர் மற்றும் மதுரைக்கான மெட்ரோ இரயில் திட்ட முன்மொழிவுகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு மெட்ரோ இரயில் கொள்கை, ஒரு மெட்ரோ இரயில் திட்டத்தைத் திட்டமிட ஒரு நகரத்தின் மக்கள் தொகை 2 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கோயம்புத்தூர் நகரத்தின் மக்கள் தொகை 15.84 லட்சமும், மதுரையின் மக்கள் தொகை 15 லட்சமும் ஆகும்.

## சென்னை துறைமுகத்தின் முதல் பசுமை இழுவைப் படகு




- சென்னை துறைமுக ஆணையமானது, உமிழ்வுக் குறைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அதன் முதல் பசுமை இழுவைப் படகுகளை வாங்குவதற்கான செயல் முறையைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் துறைமுகம் தற்போது கப்பல்களை இயக்குவதற்கும் கடல் செயல்பாடுகளைக் கையாளுவதற்கும் பயன்படுத்தப்படும் மூன்று டீசல் எரிபொருளில் இயங்கும் இழுவைப் படகுகளை இயக்குகிறது.
- பசுமை இழுவை படகு மாற்றத் திட்டம் ஆனது டீசல் எரிபொருளில் இயங்கும் இழுவைப் படகுகளை அம்மோனியா, ஹைட்ரஜன் அல்லது மெத்தனால் மூலம் இயக்கப் படும் படகுகளைக் கொண்டு மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட பசுமை இழுவை படகு ஆனது, 60 டன் இழுவைத் திறனைக் கொண்டிருக்கும் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மின்சார இழுவைப் படகுகள் நைட்ரஜன் மற்றும் கார்பன் உமிழ்வினை 100% குறைக்கின்ற அதே நேரத்தில் கலப்பின எரிபொருளில் இயங்கும் இழுவைப் படகுகள் சுமார் 25% முதல் 35% வரையிலான உமிழ்வுக் குறைப்பை அடைகின்றன.

# தேசியச் செய்திகள்

## மின்னணுவியல் கூறுகளின் உற்பத்தித் திட்டம்


- மொத்தம் 7,172 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப் படுகின்ற மின்னணுவியல் கூறுகளின் உற்பத்தித் திட்டத்தின் (ECMS) கீழ் 17 புதிய திட்டங்களுக்கு மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, குஜராத், கோவா, மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர் மற்றும் மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட 9 மாநிலங்களில் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- இதில் பல அடுக்கு PCB (மின் சுற்றுப் பலகைகள்) உற்பத்திக்கான 9 திட்டங்கள், ஒளிப் படக் கருவி தொகுதிகளுக்கான 3 திட்டங்கள், ஒளியிழை பரிமாற்றக் கருவிகளுக்கான

2 திட்டங்கள் மற்றும் இணைப்பிகள், அலையியற்றிகள் மற்றும் மூடகங்களுக்கு தலா 1 திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

- இந்தியாவின் மின்னணு மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவது, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பது மற்றும் உலகளாவிய மின்னணுச் சந்தையில் ஒரு நிலையான போட்டித் தன்மையை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.




## மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள்



- தேசிய நீதித்துறை தரவுக் கட்டமைப்பின் (NJDG) படி, மாவட்ட நீதிமன்றங்களில் 4.69 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளன.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஒரு அரசியலமைப்பு அமர்வு, கீழமை நீதிமன்றங்களின் தேக்க நிலையினை நீடித்த வழக்குகள் மற்றும் அதிகரித்து வரும் நிலுவைத் தன்மையுடன் இணைத்தது.
- அடிப்படை அறிவு இல்லாததால் டெல்லியில் உள்ள நீதிபதிகள் பயிற்சி பெற உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு அமர்வு உத்தரவிட்டது.
- துணை நீதிபதிகள் சம்மன் அனுப்புதல் மற்றும் தினசரி வழக்குப் பட்டியல்களை விசாரித்தல் போன்ற எழுத்தர் பணிகளில் மிக நீண்ட நேரம் செலவிடுவதால், வழக்குத் தீர்ப்பதற்கான நேரம் குறைகிறது.
- வணிக நீதிமன்றச் சட்டத்தின் 12(a)வது பிரிவின் கீழ் கட்டாயமான முன்வழக்கு மத்தியஸ்தம் மற்றும் சில பிற நடைமுறைத் தேவைகள் தாமதங்களுக்குப் பங்களித்து உள்ளன.
- உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள சிக்கலான விதிகள் மற்றும் நீண்ட செயல்படுத்தல் நடவடிக்கைகள் ஆகியன உரிமையியல் வழக்குகளை முடிப்பதன் வேகத்தினைத் தொடர்ந்து குறைக்கின்றன.

## 2025 ஆம் ஆண்டில் e-Jagriti தளத்தின் பயனர் வளர்ச்சி




- நுகர்வோர் குறைகளைத் தாக்கல் செய்வதை எளிதாக்குவதற்காக, அரசாங்கத்தின் டிஜிட்டல் தளமான e-Jagriti 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- இந்த தளமானது, 2025 ஆம் ஆண்டில் 2.7 லட்சத்திற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட பயனர்களைப் பெற்றுள்ளது என்ற நிலையில் இதில் 1,388 வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) அடங்குவர்.
- e-Jagriti ஆனது ஆவண வேலைகளைக் குறைத்தல், பயணத்தைக் குறைத்தல் மற்றும் நுகர்வோர் புகார்களுக்கான நேரடி ஆவணங்களை அகற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தளம் OTP அடிப்படையிலான பதிவு, டிஜிட்டல் வழி பணம் செலுத்துதல்,

காணொளி வழி விசாரணைகள், இயங்கலை வழி ஆவணப் பரிமாற்றம் மற்றும் நிகழ்நேர வழக்குக் கண்காணிப்பு ஆகியவற்றை அனுமதிக்கிறது.


## மனித-வனவிலங்கு மோதல் குறித்த உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்கள்




- வாழ்விடத் தரமிழப்பு, ஒழுங்குபடுத்தப்படாத சுற்றுலா மற்றும் தடைகளுடன் கூடிய வழித் தடங்களால் ஏற்படும் அதிகரித்து வரும் மனித-வனவிலங்கு மோதல்களைத் தடுக்க உச்ச நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டில் புதிய வழிமுறைகளை வெளியிட்டது.
- இடையக மண்டலங்களுக்குள் காடுகள் அல்லாத அல்லது சீரழிந்த வன நிலங்களில் மட்டுமே புலிகளை காண்பதற்கான பயணச் சுற்றுலாவினை உச்ச நீதிமன்றம் அனுமதித்தது என்பதோடு மையப் பகுதிகள் மற்றும் புலி வழித்தடங்களில் பயணச் சுற்றுலாவினை இது தடை செய்தது.
- வனவிலங்குகளுக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைக்க அனைத்து மைய மற்றும் முக்கியமான புலி வாழ்விடங்களிலும் இரவு நேரச் சுற்றுலா தடைசெய்யப்பட்டது.
- வணிகச் சுரங்கம், மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், பெரிய நீர் மின் நிலையங்கள், வெளிநாட்டு உயிரினங்கள் அறிமுகம், தாழ்வாகப் பறக்கும் விமானங்கள் மற்றும் வணிக ரீதியான விறகு சேகரிப்பு போன்ற நடவடிக்கைகள் இடையக மற்றும் விளிம்பு பகுதிகளில் தடை செய்யப் பட்டன.
- அனைத்துப் புலிகள் வளங்காப்பகங்களுக்கான சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின், 2018 ஆம் ஆண்டு வழிகாட்டுதல்களின்படி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அறிவிக்கப் பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.
- புலிகள் வளங்காப்புத் திட்டங்களை சரியான நேரத்தில் தயாரிக்கவோ அல்லது திருத்தவோ மற்றும் மைய மற்றும் இடையகப் பகுதிகளை 6 மாதங்களுக்குள் அறிவிக்கவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
- விரைவான நிவாரண நடவடிக்கைகளைச் செயல்படுத்த மனித-மனித-வனவிலங்கு மோதல்களை ஒரு இயற்கை பேரழிவாகக் கருதுமாறு நீதிமன்றம் மாநிலங்களுக்கு உத்தரவிட்டது.
- மனித-வனவிலங்கு மோதல்களால் ஏற்படும் மனித உயிரிழப்புகளுக்கு 10 லட்சம் ரூபாய் என்ற ஒரே சீரான இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது.
- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) ஆனது 6 மாதங்களுக்குள் மனித-வன விலங்கு மோதல் தணிப்பு வழிகாட்டுதல்களை உருவாக்கி நாடு தழுவிய அளவில்

செயல்படுத்துவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

## மெக்காலேயின் 1835 ஆம் ஆண்டு கல்விக் கொள்கை குறித்து பிரதமர்





- 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது இராம்நாத் கோயங்கா சொற்பொழிவில், இந்தியாவின் கல்வி முறையில் தாமஸ் மெக்காலேயின் 1835 ஆம் ஆண்டு திட்ட அறிக்கையின் தாக்கம் குறித்து பிரதமர் உரையாற்றினார்.
- இந்தக் கொள்கையானது ஆங்கில கல்வியை அறிமுகப்படுத்தி, நிதியை முழுமையாக ஐரோப்பிய இலக்கியம் மற்றும் அறிவியலுக்கு மாற்றியது.
- இந்தக் கொள்கையானது கிழக்கத்தியக் கல்லூரிகளை மூட உத்தரவிட்டது மற்றும் பாரம்பரிய இந்தியக் கற்றலுக்கான அரசாங்க ஆதரவை முடிவுக்குக் கொண்டு வந்தது.
- மெக்காலேயின் "Downward Filtration Theory" (பெருமளவிலான அடித்தட்டு மக்களுக்கு கல்வியளிக்கும் திட்டம்) மக்களுக்கு கல்விக் கற்பிக்கும் ஒரு சிறிய குறிப்பிட்ட உயர அடுக்கினருக்கு மட்டுமே கல்வி கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த அணுகுமுறை இந்தியாவின் உள்நாட்டு அறிவு மரபுகளைப் பலவீனப்படுத்தியது மற்றும் பல தசாப்தங்களாக காலனித்துவ கல்வியை வடிவமைத்தது என்று பிரதமர் கூறினார்.

# பொருளாதாரச் செய்திகள்

## அக்டோபர் மாதத்தில் தங்க இறக்குமதி

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக தங்க இறக்குமதிப் பதிவானது.
- பண்டிகை மற்றும் திருமண காலத் தேவை காரணமாக தங்க கொள்முதல் 14.72 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் மூன்று மடங்காக அதிகரித்தது.
- இது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 4.92 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- இந்தியாவில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 41.68 பில்லியன் அமெரிக்க டாலர் வர்த்தகப் பற்றாக்குறை பதிவானது.
- சுவிட்சர்லாந்து இந்த மாதத்தில் இந்தியாவின் தங்க இறக்குமதியில் 40% பங்கினைக் கொண்டிருந்தது.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் மொத்த இறக்குமதியில் சுமார் 5 சதவீதத்திற்கும் அதிகமான பங்கைத் தங்கத்தின் இறக்குமதி கொண்டிருந்தது.





## 2026–31 ஆம் ஆண்டிற்கான அறிக்கை சமர்ப்பிப்பு - 16வது நிதி ஆணையம்

- பொருளாதார நிபுணர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையம் ஆனது, இந்தியக் குடியரசுத் தலைவரிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.
- மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் வரி பங்கீட்டிற்கான அடிப்படையை இந்த நிதி ஆணையம் பரிந்துரைக்கிறது.
- இந்த அறிக்கை 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2031 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையிலான 5 ஆண்டுகளை உள்ளடக்கியது.
- 16வது நிதி ஆணையத்திற்கான பணிக் காலத்தை 2024 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் தேதியன்று மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையின்படி, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் ஆணையம் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளுக்கான மானிய உதவி மற்றும் நிதி ஆதாரங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கான கொள்கைகளை பரிந்துரைப்பதும் இந்த ஆணையத்திற்கு பணிக்கப் பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய கரிம வரவு செலவு எச்சரிக்கை




- உலகளாவியப் புதைபடிவ எரிபொருள் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு 2025 ஆம் ஆண்டில் 1.1% அதிகரித்து, இதுவரையில் இல்லாத அளவாக 38.1 பில்லியன் டன்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிலப் பயன்பாட்டு மாற்ற உமிழ்வு 4.1 பில்லியன் டன்களாகக் குறைந்ததால், மொத்த $CO_2$ உமிழ்வு (புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றம்) இந்த ஆண்டு சற்று குறைவாக உள்ளது.
- 2023–24 ஆம் ஆண்டு எல் நினோ செயல்பாடுகள் முடிந்த பிறகு நில கார்பன் பிடிப்பு எல் நினோவுக்கு முந்தைய நிலைக்கு மீண்டது.
- பருவநிலை மாற்றம் ஆனது நிலம் மற்றும் கடல் கார்பன் பிடிப்புகளை பலவீனப்படுத்தியுள்ளது என்பதோடு இது 1960 ஆம் ஆண்டு முதல் வளிமண்டல $CO_2$ அதிகரிப்பில் 8% பங்களிக்கிறது.
- வெப்பமயமாதலை 1.5°C வரம்பிற்குள் கட்டுப்படுத்துவதற்கான மீதமுள்ள கார்பன்

வரவு செலவு மதிப்பு 170 பில்லியன் டன்கள் ஆகும் என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு உமிழ்வு விகிதத்தில் நான்கு ஆண்டுகளுக்கு சமமாகும்.

- சீனாவின் உமிழ்வு 0.4%, இந்தியாவின் உமிழ்வு 1.4%, அமெரிக்காவின் உமிழ்வு 1.9% மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உமிழ்வு 0.4% அதிகரிக்கும் என்று கணிக்கப் பட்டு உள்ளது.
- ஜப்பானின் உமிழ்வு 2.2% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## முறையான கண்காணிப்பு தாக்கப் பத்திரம்




- உலகளாவிய வானிலை மற்றும் பருவநிலைத் தரவுகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் உலகின் முதல் பருவநிலை-நிதிப் பத்திரமாக முறையான கண்காணிப்பு தாக்கப் பத்திரம் தொடங்கப்பட்டது.
- இந்தப் பத்திரம் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முறையான கண்காணிப்பு நிதி வசதி (SOFF) மூலம் சுமார் 200 மில்லியன் டாலரை திரட்டுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது 30 குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் வளர்ந்து வரும் சிறிய தீவு நாடுகளை உலகளாவிய அடிப்படைக் கண்காணிப்பு வலையமைப்பு (GBON) தர நிலைகளை பூர்த்தி செய்ய ஆதரிக்கிறது.
- இதன் முடிவுகள் உலக வானிலை அமைப்பு (WMO) சுயாதீனமாக சரி பார்க்கப் பட்டு உள்ளதுடன், இந்த முன்னெடுப்பு ஆனது சர்வதேச அளவில் பகிரப்பட்ட வானிலை மற்றும் பருவநிலை அவதானிப்புகளில் ஐந்து மடங்கு அதிகரிப்பை இலக்காகக் கொண்டுள்ளது.
- கண்காணிப்பு இடைவெளிகளைப் பூர்த்தி செய்வது 5 பில்லியன் டாலர் மதிப்பிலான நேரடி வருடாந்திர நன்மைகளை வழங்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 160 பில்லியன் டாலர் வரையிலான மாபெரும் பொருளாதார ஆதாயங்களைப் பெற உதவும்.
- இது UNEP, WMO மற்றும் UNDP ஆகியவற்றால் நிறுவப்பட்ட UN நிதியான முறையான கண்காணிப்பு நிதி வசதி (SOFF) என்ற அமைப்பால் வழி நடத்தப் படும்.


# மாநிலச் செய்திகள்

## அசாம் வாக்காளர் பட்டியலின் சிறப்புத் திருத்தம்

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது அசாமில் வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத்

திருத்தத்தினை மேற்கொள்ள உத்தரவிட்டது.

- மாநிலத்தில் தேசிய குடிமக்கள் பதிவேடு நிலை இன்னும் நிலுவையில் உள்ளதனால், இந்த நடவடிக்கை சிறப்புத் தீவிர திருத்தத்திலிருந்து வேறுபட்டது.
- 2019 ஆம் ஆண்டு தேசியக் குடிமக்கள் பதிவேட்டில் 3.3 கோடி பேரில் 19.6 லட்சம் விண்ணப்ப தாரர்கள் சேர்க்கப்படவில்லை என்பதோடு மேலும் இறுதி அறிவிப்பு இன்னும் வெளியிடப்படவில்லை.
- வாக்காளர்கள், கணக்கெடுப்பு படிவங்களை நிரப்ப வேண்டிய அவசியமின்றி, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள் மூன்று அறிக்கைகளைப் பயன்படுத்தி வீடு வீடாகச் சரிபார்ப்பை மேற்கொள்வார்கள்.
- வெளிநாட்டினர் தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் இது மாற்றி அமைக்கப் படாவிட்டால், D வாக்காளர்களின் (சந்தேக வாக்காளர்கள்) விவரங்கள் மாறாமல் இருக்கும்.
- இந்தச் சரிபார்ப்பு நவம்பர் 22 முதல் டிசம்பர் 20 ஆம் தேதி வரை நடைபெறும் என்பதோடு இதன் வரைவு பட்டியல் டிசம்பர் 27 ஆம் தேதியன்றும், இறுதிப் பட்டியல் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் தேதியன்றும் வெளியிடப்படும்.




## சிறுத்தை பிறப்புக் கட்டுப்பாடுத் திட்டம் - மகாராஷ்டிரா

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகம் (MoEFCC) ஆனது மகாராஷ்டிராவில் சிறுத்தை பிறப்புக் கட்டுப்பாடு (கருத்தடை) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- இது இந்தியாவின் முதல் சிறுத்தை பிறப்புக் கட்டுப்பாட்டுத் திட்டமாக இருக்கும்.
- ஜுன்னார் வனப் பிரிவில் (புனே மாவட்டம்) ஐந்து பெண் சிறுத்தைகள் மீது நோயெதிர்ப்புடன் கூடிய கருத்தடை முறையைப் பயன்படுத்தி இந்தச் சோதனை மேற் கொள்ளப் படும்.
- கருத்தடை அறுவை சிகிச்சையானது கருவுறுதலைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்த dart முறையில் உடலில் மேற்கொள்ளப்படும் என்பதோடு நோயெதிர்ப்புத் திறனுடன் கூடிய கருத்தடை முறையைப் பயன்படுத்தும்.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) இந்தத் திட்டத்தை மதிப்பாய்வு செய்து

கட்டுப்படுத்தப் பட்ட, அறிவியல் பூர்வமாக கண்காணிக்கப்பட்ட சோதனையை ஆதரித்தது.

- இந்தத் திட்டம் ஜுன்னார் மற்றும் ஷிரூர் போன்ற கரும்பு விளைப் பகுதிகளில் மனித-சிறுத்தை மோதலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச ஆயுர்வேத மாநாடு 2025





- 3வது சர்வதேச ஆயுர்வேத மாநாடு ஆனது பிரேசிலின் சாவோ பாலோவில் நடைபெற்றது.

- இந்த நிகழ்வை சுவாமி விவேகானந்தா கலாச்சார மையம் மற்றும் இந்திய கலாச்சார உறவுகளுக்கான சபை ஆகியவை (கோனயூர்) இணைந்து ஏற்பாடு செய்தன.
- பிரேசிலில் ஆயுர்வேதத்தின் 40 ஆண்டுகளைக் குறிக்கும் இந்த மாநாடு ஆனது, பாரம்பரிய மருத்துவத்தில் இந்தியா-பிரேசில் ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி 2025




- வங்காள தேசத்தின் டாக்காவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா முதலிடம் பிடித்தது.
- இந்தியா 6 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதக்கம் உட்பட 10 பதக்கங்களை வென்றது.
- அங்கிதா பகத் மகளிர் ரிகர்வ் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- தீரஜ் பொம்மதேவரா ஆடவருக்கான ரிகர்வ் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றார்.


# முக்கிய தினங்கள்

## கெபாங் லா தினம் 2025 – நவம்பர் 17



- 1962 ஆம் ஆண்டு இந்தியா-சீன மோதலின் போது கெபாங் லா எல்லைக் கணவாயில் நடைபெற்ற பாதுகாப்பு முயற்சியை இந்த நாள் நினைவு கூர்கிறது.
- அப்பர் சியாங்கில் உள்ள கணவாயில் 1962 ஆம் ஆண்டில் சீனப் படைகள் முன்னேறுவதை இந்திய வீரர்கள் மற்றும் உள்ளூர் கிராமவாசிகள் கடுமையான முறையில் போராடி எதிர்த்தனர்.
- டுட்டிங்கில் ஆண்டுதோறும் நடைபெறும் நினைவு கூரல்கள், இந்திய இராணுவத்தின் ஸ்பியர் படைப்பிரிவினால் மக்களின் பங்கேற்புடன் நடத்தப்படுகின்றன.
- 1962 ஆம் ஆண்டு மோதலின் போது கெபாங் லா கணவாயுடன் தொடர்புடைய இராணுவ மற்றும் உள்ளூர் மக்களின் எதிர்ப்பின் பதிவை இந்த நாள் பாதுகாக்கிறது.

## வாலோங் தினம் 2025 – நவம்பர் 16




- 1962 ஆம் ஆண்டு இந்தியா-சீன மோதலின் போது வாலோங் பகுதியில் நடந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை (பாதுகாக்கப்பட்டதை) இந்த நாள் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் 63வது இத்தின அனுசரிப்பில் அருணாச்சலப் பிரதேசத்தில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.
- வாலோங் போரில் 388 இந்திய வீரர்கள், 27 நாட்கள் தங்கள் வரை போராடி உச்ச பட்சத் தியாகத்தைச் செய்தனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★